# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி

**OS.No.34/2015, நாள்.17.07.2023**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டடது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ச் கிளர்க் திரு. ராமன் அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | ராமச்சந்திரன் | **வயது** | |
| **த/பெ. க/பெ.** | **கோவிந்தன்** | **மதம்** | |
| **முகவரி** | **பாரூர்** | **தொழில்** | |

**<u>பி.சா. 1 ஆஜர். வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் 7 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது தகப்பனார் கோவிந்தபூஜாரி எந்த வருடம் பட்டாளம்மன் கோவிலில் பூசாரியாக நியமிக்கப்பட்டார் என்றால் சுமார் 60 வருடங்களாக அந்த கோவிலில் பூசாரியாக உள்ளார். எனது தகப்பனார் முனியப்ப பூசாரி அவர் பூசாரியாக உள்ளார். மேற்படி கோவிலில் பூசாரியாக பரம்பரையாக நாங்களே பூசாரியை நியமித்து கொள்வோம் என்றால் சரிதான். மேற்படி கோவிலுக்கு 22 கிராமும் சொந்தமானது மற்றும் 3 பஞ்சாயத்தை கொண்டது ஆகும். மேற்படி பட்டாளம்மன் கோவிலுக்கு 22 கிராம பொதுமக்களும் சேர்ந்து அர்ச்சகரை நியமனம் செய்யவேண்டும்ள ன்று சொன்னால் சரிதான். நாங்களாகவே பரம்பரையாக நியமித்து கொள்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் சுமார் 16 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். இறப்பு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி கோவிலின் அறங்காவலராக அரசு என்னை சுமார் 1 வருடங்களுக்கு நியமனம் செய்துள்ளது. இந்து அறநிலையத்துறையின் உத்தரவை நான் வழக்கில் சமர்பித்துள்ளேன் என்றால் சரிதான். அரசாங்கத்தால் நியமனம் செய்து சுமார் 1 ஆண்டுக்காலம்தான் ஆகிறது என்றால் சரிதான். வாதி ஆறுமுககவுண்டருக்கு 100 வயதிற்கு மேல் ஆகிறது என்று சொன்னால் சரிதான். வாதி 1970 ஆம் ஆண்டு முதல் மேற்படி கோவிலின் நிலத்துக்கு குத்தகைதாரராக இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. வாதி 1971–1976 வரை ஐந்து ஆண்டுகள் நிலத்தை குத்தகைக்கு எடுத்து இருந்தார். நிலத்தை

விவசாயம் செய்து அவர் வரி கட்டிக்கொண்டிருந்தார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விவரம் எனக்கு நேரடியாக தெரியும். அப்போது என் வயது எவ்வளவு இருக்கும் என்று சொன்னால் 20 இருக்கும். வாதி ஐந்து வருடங்கள் மட்டும் குத்தகைக்கு இருந்ததாக சொல்வது தவறு என்றும் அவர்தான் நிரந்தரமாக குத்தகை எடுத்து இருந்தார் என்றால் சரியல்ல. 1969 ஆம் ஆண்டு நிலஉடமை சட்டத்தின் படி வாதி குத்தகைதாரராக கருதப்பட்டு 1970 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை பட்டாளம்மன் கோவிலில் சுமார் 4 ஏக்கர் 38 சென்ட்டுக்கு குத்தகைதாரராக உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பானருக்கும், வாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டு வாதி 1975 ஆம் ஆண்டு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கிருஷ்ணகிரி அசல் வழக்கு எண். 345/1975 வழக்கு தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான். நான் அந்த காலத்தில் மேற்படி வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்திற்கு செல்லவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கில் 15.02.1977 ல் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். 15.02.1977 ல் மேற்படி வழக்கில் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு ஆனது என்று சொன்னால் சரியல்ல. தீர்ப்பு எங்களுக்கு சாதகமானது. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் வாதிக்கும், கோவிந்தன் பூசாரிக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக கிருஷ்ணகிரி மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் 345/1975 என வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கானது முழுமையான விசாரணைக்கு பிறகு வாதிக்கு ஆதரவாக வாதியின் உரிமையை விளம்புகை செய்தும், தாவா சொத்தில் வாதி குத்தகைதாரராக இருந்து விவசாயம் செய்வதற்கும், வாதியின் நிம்மதியான சுவாதீனத்திற்கு என் தந்தை எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என கடந்த 28.02.1977 ஆம் தேதியில் உத்தரவானது என்பது சுத்த பொய் என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் கிருஷ்ணகிரி சிறப்பு நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு எண். 59/1994 தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி மேல் முறையீட்டில் விசாரணை நீதிமன்றத்தில் தீர்ப்பானது உறுதி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் பொய்யாக சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான். வாதிக்கு ஆதரவாக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அது பொய்யானது ஆகும். மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கிருஷ்ணகிரி, மேல் முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றில் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாகியுள்ளது என்று

சொன்னால் சரியல்ல. அது பொய்யான தீர்ப்பாகும். மேற்படி தீர்ப்பின் மீது நாங்கள் எவ்வித மேல் முறையீடும் செய்யவில்லை. சுமார் 6 மாதங்களுக்கு முன்பு நானும், மற்றும் சிலரும் வழக்கு சொத்தில் சுவாதீனத்தை இடைஞ்சல் செய்து சுவாதீனம் எடுக்க சென்றோம் என்றும், அதனால் போச்சம்பள்ளி காவல் நிலையத்தில் வாதியின் மகன் அரியபூபதி என்பவர் புகார் கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. காவல் நிலையத்தில் ஆவணங்களை பரிசீலனை செய்து வாதிக்கு ஆதரவாக நீதிமன்ற உத்தரவு இருந்த காரணத்தால் என்னிடம் வழக்கு சொத்தில் பிரச்சனை செய்யமாட்டேன் என்று எழுதி வாங்கினார்கள் என்று சொன்னால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V
SHANMUGANATHAN

District Munsif cum Judicial
Magistrate
Digitally signed by S V
SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.